# 11 இறையாட்சியும் பேதுரு - பவுல் என்போரின் சீடத்துவமும்

ஆண்டவர் இயேசுவின் வருகையுடன் இறையாட்சி இவ்வுலகில் ஆரம்பமாகியது. இதனைப் பரவச் செய்வதற்கென அவர் சீடர்களை அழைத்தார்.

ஆரம்பத்தில் அழைக்கப்பட்ட சீடரை ஆதித் திருச்சபை 'அப்போஸ்தலர்' என அழைத்தது. அப்போஸ்தலர் என்ற கிரேக்க சொல்லின் கருத்து 'அனுப்பப்பட்டவர்' என்பதாகும். இயேசுவின் சீடர்கள் அவருடன் வாழ்ந்து, அவரின் போதனைகளைக் கடைப்பிடித்து, நற்செய்தியை எடுத்தியம்புவதற்காக அனுப்பப்பட்டனர். நாம் அவர்களை திருத்தூதர் என்று அழைக்கிறோம்.

## சீடர்களின் முதன்மையானவராக அழைக்கப்பட்ட பேதுரு

ஒருநாள் இயேசு கலிலேயாவின் கெனசரேத்து ஏரியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த பேதுருவையும் அவரின் சகோதரரான அந்திரேயாவையும் கண்டு,

*என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்றார்.* மாற்கு 1 : 16 - 20




இவ்வாறு இறையாட்சியை பரவச் செய்வதற்கென அழைக்கப்பட்ட பன்னிரு சீடர்களின் பெயர்களை மாற்கு 3 : 13-19 இல் காண்கிறோம்.
யூதர்கள் மெசியாவை எதிர்ப்பார்த்திருந்தனர் இந்நிலையில் பேதுரு இயேசுவை '**நீர் மேசியா' வாழும் கடவுளின் மகன்**' என்றுரைத்தார். (மாற்கு 8:29) அவ்வேளையில் இயேசு, 'விண்ணரசின் திறவுகோலை நான் உன்னிடம் தருவேன்' என்றார். எனினும் இயேசுவின் திருப்பணியின் முழு உள்நோக்கையும் பேதுரு முற்றிலுமாக உணராதிருந்தார். அவர், இறைமகன் பாடுகளைச் சந்தித்து மரணமடையக் கூடாதென எண்ணி இயேசுவை கடிந்து கொண்டவர். இவ்வாறு பேதுரு இறை விருப்பிற்குத் தடையாக இருந்ததால் இயேசுவும் பேதுருவைக் கடிந்து கொண்டார். 'நீ கடவுளுக்கு ஏற்றவைகளை எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவை பற்றியே எண்ணுகிறாய்' என்றார்.



இலவச விநியோகத்திற்காக

இயேசுவின் விசாரணை நடந்துகொண்டிருந்த இக்கட்டான சூழலில்; பேதுரு ஓரளவு தைரியத்துடன் தூரத்தில் சென்று அமர்ந்து கொண்டார். எனினும் பேதுரு இயேசுவோடு இருந்தவரென இனங்கண்டு கொள்ளப்பட்டபோது, 'நீங்கள் குறிப்பிடுகின்ற இந்த மனிதனை (இயேசுவை) எனக்குத் தெரியாது' என்று பொய் சொல்லி தன்னைத் தப்புவித்துக் கொண்டார். (மாற்கு 14:66-72). எனவே இயேசுவுடன் சேர்ந்து திருப்பணி செய்தபோதும், அவரின் விசுவாச வாழ்வில் இறையரசின் மனப்பாங்குகளுக்கும் அதேவேளையில் தீமையான எதிர்மனப்பாங்குகளுக்கும் இடையேயான இழுபறிநிலையில் சிக்குண்டவராக இருந்தார்.

எவ்வாறேனும் உயிர்த்தெழுந்த இயேசுவை சந்தித்த பின்னர் தம் தவறுகளை உணர்ந்து. இறையரசின் விழுமியங்களை முற்றிலுமாகப் புரிந்து கொள்கிறார். இயேசுவின் (தமது விடாது தொடரும்) எல்லையற்ற அன்பினால்அவர் பேதுருவை மன்னித்து திரும்பவும் திருப்பணிக்கு அழைக்கின்றார். புதிய மனிதனாகிய பேதுருவிடம் தம்மைப் பின்பற்றிய மக்களைப் பேணி வழிநடத்தும்படி பொறுப்புக் கொடுத்தார். 'என் ஆடுகளை மேய்' என்றார். பேதுரு தன் வாழ்வில் பெற்ற இரண்டாவது அழைப்பு இதுவாகும்.



அதன் பின்னர் திருச்சபையில் முக்கிய சீடனாக நிறைவான அர்ப்பணிப்போடு திருப்பணி செய்தார். பெந்தக்கோஸ்து திருநாளின் போது புதுப்பெலன் அடைந்தவராய் ஆதித் திருச்சபையில் முதல் பிரசங்கத்தை ஆற்றினார். இறையாட்சி பற்றி தைரியமுடன் செசரியா போன்ற இடங்களில் யூதரல்லாதவர் மத்தியிலும் எடுத்துரைத்தார். (திருத்தூதர பணி அதிகாரம் 10). திருப்பணிக்காக இறைவன் தரும் ஈவுகளையும், தாலந்துகளையும் பணம் சம்பாதிப்பதற்காக உபயோகிப்பதை வன்மையாகக் கண்டித்தார். இவ்வாறு செய்ய முயன்ற சீமோன் என்னும் மாயவித்தைக்காரனை நோக்கி : 'கடவுளது கொடையை பணம் கொடுத்து வாங்க எண்ணியதால் நீயும் உன் பணத்தோடு நாசமாய்ப் போ' என்றார். (திருத்தூதர் பணிகள் 8 : 14-25)


முன்னர் துன்புறுத்தல்களுக்கு முகம்கொடுக்காது இயேசுவை மறுதலித்த பேதுரு, பின்னர் சுயமாக பாடுகளை ஏற்றுக்கொண்டு விசுவாசிகளுக்கு நம்பிக்கை நிறைந்த இறையரசின் செய்திகளை அறிவித்தார்.

‘இப்போது சிறிதுகாலம் நாங்கள் பல்வகைச் சோதனைகளால் துயருற வேண்டியிருப்பினும், அந்நாளில் பேருவகை கொள்வீர்கள் (1 பேதுரு1:6). கிறிஸ்துவின் துன்பங்களில் நீங்கள் இத்துணை பங்குகொள்கிறீர்கள் என்று எண்ணி மகிழுங்கள்’ ‘நீங்கள் கிறிஸ்தவராக இருப்பதால் துன்புற்றால் அதற்காக வெட்கப்படக் கூடாது.’ என்று கூறினார்.

*வாசியுங்கள்*
*1 பேதுரு 4:12-16*

இவ்வாறு புதிய நோக்குடன் துன்பங்களை எதிர்நோக்கியப் பேதுரு கி.பி 64 இல் நீரோ எனும் உரோம பேரரசன் ஆட்சியில் இரத்தச் சாட்சியாக சிலுவையில் மரித்தார் எனும் பாரம்பரியம் உண்டு.

## இயேசுவுக்காக துன்புற்ற பவுல்



திருத்தூதர் பணி நூலில் முதலில், பவுல் கிறிஸ்தவர்களை துன்புறுத்திய ஒருவராக, சவுல் என்ற பெயருடன் அறிமுகப்படுத்தப்படுகின்றார். ஏழுதிருத்தொண்டர்களில் ஒருவரான ஸ்தேவன் கொல்லப்படுவதற்கு பவுலும் உடன்பட்டிருந்தார். கிறிஸ்தவம் என்னும் ‘புதிய நெறியை’ பின்பற்றியவர்களைப் பிடித்துச் சிறையி லடைத்தார். இதற்கென தமஸ்குவிற்கு செல்லும்போது உயிர்த்த இயேசுவை வானத்திலிருந்து தோன்றிய ஒளியில் எதிர்கொள்கிறார். அவ்வேளையில் கண் பார்வை இழந்தார். தமஸ்குவில் அவரைச் சந்திக்க கடவுள் அனனியாவிடம் ‘அவர்(பவுல்) பிற இனத்தவருக்கும் அரசருக்கும் இஸ்ரயேல் மக்களுக்கும் முன்பாக என் பெயரை எடுத்துச் செல்ல நான் தேர்ந்தெடுத்துக் கொண்ட கருவியாக இருக்கிறார். என் பெயரின் பொருட்டு அவர், எத்துணை துன்புறவேண்டும் என்பதை நான் அவருக்கு எடுத்துக் காட்டுவேன்’ என்று கூறினார். யூத தலைமைக் குருக்களிடம் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துவதற்கு அதிகாரம் பெற்ற அவர் உயிர்த்த இயேசுவைச் சந்தித்த பின்னர், அவரின் பெயரின் பொருட்டு துன்புறுவதற்கு அழைக்கப்பட்டார். கிறிஸ்தவர்களாகிய நமக்கு அறைகூவலாக விளங்கும் இந்நிகழ்வைப்பற்றி நீங்கள் தி.பணி 9ம் அதிகாரத்தில் வாசித்து பயன்பெறுங்கள்.

மனந்திரும்பிய பவுல் மிக ஆர்வத்தோடும் வைராக்கியத்தோடும், திடமனதோடும் இயேசுவின் நற்செய்தியைப் போதித்து வந்ததால், யூதரகள் அவரைக் கொலை செய்ய வகைதேடினார்கள். அதனால் அவர் தரிசுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதன் பின்னர் சிரியா, சிலிசியா போன்ற இடங்களிலும் மத்திய தரைக்கடல் பிரதேசத்திலும் திருப்பணியில் ஈடுபட்டபோது பல்வேறு துன்பங்களுக்கு ஆளானார். அவற்றை நாம் 2கொரி 11:23-28 இல் காணலாம்.

பல்வேறு இன்னல்களின் மத்தியிலும், அவர் மத்திய தரைக்கடலையொட்டிய பகுதிகளில் புதிய கிறிஸ்தவ சபைகளை ஏற்படுத்தினார். உரோமையில் அவர் நற்செய்தி கூற எண்ணியிருந்தாலும், தடைகள் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் செசரியா சிறைச்சாலையில் கழிக்க வேண்டி ஏற்பட்டது. ஆனால் அங்கிருந்து சிறைக்கைதியாக உரோமிற்குச் சென்று பணிபுரிவதற்கு தமது உரோம குடியுரிமையை உபயோகித்தார். உரோமில் வீட்டுக் காவலில் இருந்து கொண்டு இரு வருடங்கள் திருப்பணியை மேற்கொண்டார். தமது கைககள் விலங்குகளால் கட்டப்பட்டிருந்த நிலையிலும் திருமுகங்களை எழுதி சபைகளைப் பெலப்படுத்தினார்.

*நான் வாழ்ந்தால் அது கிறிஸ்துவுக்காகவே,*
*நான் இறந்தால் அது எனக்கு ஆதாயமே - பவுல்*

உரோமின் நீரோ பேரரசனால் கி.பி 64ல் பவுல் சிரச்சேதம் செய்யப்பட்டார் எனும் ஒரு பாரம்பரியம் உண்டு.

**பேதுரு, பவுல் என்போரை ஒன்றாக நோக்கும்போது....**

- இருவரும் ஆரம்பத்தில் கிறிஸ்துவைப் பின்பற்றுவதில் சிரமத்தை எதிர்நோக்கினர்.
- பின்னர் இருவரும் இயேசுவை மிக சிறப்பான முறையில் சந்திக்கின்றனர்.
- இச்சந்திப்பின் பின்னர் இருவரும் மனந்திரும்பி, தம்மை அர்ப்பணித்தனர்.
- இயேசுவுக்காக துன்பங்களை ஏற்கவேண்டுமென்று உணர்ந்து அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கின்றனர்.

**பேதுரு, பவுல் இருவரின் வாழ்விலிருந்து நாம் அறிந்து கொள்வது,**

- ஆண்டவரின் அழைப்பை உதாசீனம் செய்வது கடினமான காரியம்.
- ஒருவரின் வாழ்க்கை எந்நிலையிலிருப்பினும் கடவுள் தமக்குச் சித்தமானபடி அவரை மாற்ற வல்லவராக இருக்கிறார்.
- மனந்திரும்பியவர்கள் நீதியின் வாழ்வை வாழுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
- இயேசுவைப் பின்பற்றுவோரை அவர் பெலப்படுத்தி, திருப்பணியில் ஈடுபட வழி திறக்கின்றார்.
- திருப்பணியில் சந்திக்க நேரிடும் அனைத்து இன்னல்களுக்கும் முகங்கொடுக்க பெலத்தையும், வழிநடத்துதலையும் தருகிறார்.
- இதுவொன்றே ஒருவருக்கு நிறைவான மகிழ்ச்சியையும் முற்றான ஆசீரையும் வழங்கக்கூடியது. 1 பேதுரு 4 :14
- கடவுளின் குடும்பத்தில் நமது அங்கத்துவத்தை உறுதிப்படுத்துகிறது.
- துன்பங்களின் மத்தியிலும் 'நல் எதிர்நோக்குடன் வாழ்கிறோம்'

### செயற்பாடு

- *இரு குழுக்களாக கீழுள்ள ஒவ்வொரு பகுதியை நோக்கவும்*
- *2 கொரிந்தியர் 11 : 23-28 வரை வாசித்து பவுல் அனுபவித்த துன்புறுத்தல்களை நிரல்படுத்தவும்.*
- *பேதுரு துன்புறுத்தப்படுவோருக்கு வழங்கும் அறிவுரைகளை 1 பேதுரு 4:12-17 வரை வாசித்து நிரல்படுத்தவும்.*
- *இரு குழுக்களுமாகச் சேர்ந்து மேற்கண்ட பெறுபேறுகளைக் கலந்துரையாடவும்.*
- *மரியா, மகதலா மரியா போன்ற விசுவாசப் புரட்சியாளர்களின் கதைகளை உமது சூழ்நிலையில் வாழ்ந்த /வாழும் சில முக்கிய நபர்களோடு பொருத்தி தகவல்களைப் பரிமாறவும்.*

## செயன்முறை

1. மனித சமுதாயத்தின் விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என்பதற்கான அடிப்படைக் காரணங்கள் யாவை?
2. கிறிஸ்தவர்கள் எவ்வாறான துன்புறுத்தல்களை மகிழ்ச்சியோடு ஏற்க வேண்டும்?
3. "இறையாட்சியின் விழுமியங்களின்படி வாழ்வது மெய்யான புரட்சி" என விளக்குங்கள்.